உ
சிவமயம்

காரைக்குடி நாகநாதபுரம்
கோயில்கள்

தெய்வப் பாடல்

தொகுப்பு :
'தமிழ்க்கடல்', 'சிவமணி'
'சிவம்பெருக்கும் சீலர்'
ராய. சொ.

வெளியீடு :
அ. தெ. மு. மு.
நடராசன் செட்டியார்
காரைக்குடி.

உ

சிவமயம்

காரைக்குடி நாகநாதபுரம் கோயில்கள்

தெய்வப் பாடல்

தொகுப்பு :

' தமிழ்க்கடல் ', ' சிவமணி '

' சிவம்பெருக்கும் சீலர் '

ராய. சொ.

வெளியீடு :

அ. தெ. மு. மு. நடராசன் செட்டியார்

காரைக்குடி.

உ

சிவமயம்

தெய்வப் பாடல்

நூல் முகம்

காரைக்குடி நகரச் சிவன் கோயிலில் எழுந்தருளியுள்ள மீனாட்சிசுந்தரேசுரப் பெருமானுக்கு அறப்பணிக் குழுவின் தலைவனாக இருந்து, தொண்டு செய்யும் பேற்றை அடியேன் ஏழு ஆண்டுகட்கு முன் பெற்றேன். அக்கோயிலின் வளர்ச்சிக்கு என்னுடைய ஆற்றலுக்கு ஏற்ப, சில நற்பணிகள் செய்தேன். அதனை மனத்தில் கொண்டு, காரைக்குடி நகரத்தின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள நாகநாதபுரம் பெருமாள் கோயில், சிவன் கோயில், பிள்ளையார் கோயில் ஆகியவற்றை

நடத்தும் பொறுப்பை, அக்கோவில்களின் உரிமையாளர் அனைவரும் சேர்ந்து மூன்று ஆண்டு கட்கு முன், என்னிடம் தந்தனர். அக்கோயில் களில் தோன்றிய சிக்கல் பலவற்றைப் போக்கி, அவற்றை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டன.

நூற்றுஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், காரைக்குடியில் வாழ்ந்த, ராய. நாகப்பசெட்டியார் என்ற சான்றோர், நாகநாதபுரம் என்ற சிறப்புப் பெற்ற ஊரைக்கண்டு, அப்பகுதியில் நாகலிங்க விநாயகர் கோயிலையும், கிருட்டினமூர்த்திப் பெருமாள் கோயிலையும், நாகநாதப்பெருமான் கோயிலையும், எழுப்பி, தம்புகழ் நிறுவி அமரரானர். அவர் வழி வந்தவர்கள் இக்கோயில்களை நடாத்தி வருகின்றனர்.

இக்கோயில்கள் காரைக்குடி நகரச் சிவன் கோயிலுக்குப் பல ஆண்டுகள் முன்னே தோன்றியன. நாகநாதபுரம் பெருமாள் கோயில் திருவிழா மிகப் பல ஆண்டுகளுக்கு முன்னர்

தொடங்கி, பெரும் சிறப்பாக நடந்து வந்தது. பின்னர் நாகநாதபுரம் சிவன் கோவில் திருவிழாவும் தொடங்கப் பெற்று, சில ஆண்டுகள் செவ்வனே நடைபெற்றது. பின் அவை நின்று பலஆண்டுகள் ஆகிவிட்டன. சுவாமிகளுக்கும் காலம் உண்டு போலும்!

இப்போது நாகநாதபுரம் கோயில்களுக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது என்று தோன்று கிறது. எனவேதான் பொருள் நிறைந்த அருளாளர் உள்ளத்தில் ஆண்டவன் புகுந்து, இத்திருப் பணிக்கு உதவி புரியத் தூண்டியிருக்கின்ருன். கோயில்கள் பெரும் பொருட் செலவில், தக்க முறையில் திருத்தம் செய்து, திருப்பணி செய்யப் பெற்றிருக்கின்றன. இறைத்தொண்டு செய்வதற் கென்றே பிறந்த என் நண்பர்கள் இரவு பகலாக உழைத்து, என் பணியைப் பெரிதும் சிறக்கச் செய்திருக்கின்றனர். கும்பாபிடேகம் பெருமிதமாக, நிகழும் கீலக, சித்திரை, இருபத்தோராம் நாள் நடைபெற இருக்கின்றது.

இக்கோயில்கள் என்றும் நன்முக நடைபெறு தற்குரிய வழி வகைகளும் செய்யப் பெற்று வருகின்றன. கோவில்களில் அருளாளர்கள் பாடிய தெய்வப் பாடல் பல, அழகாக அந்தந்த இடத்திற்குப் பொருத்தமாக எழுதப்பெற்றிருக் கின்றன. அப்பாடல்கள் எல்லாம் தொகுக்கப் பெற்று, 'தெய்வப் பாடல்' என்ற பெயரில் இந் நூல் வெளிவருகின்றது. இந்நூலில் சிவன்-திருமால் ஆகிய இரண்டு கடவுட் சார்பு பற்றிய பாடல்களும் விரவி இருப்பது தனிச் சிறப்பு. கோயில்கள் எப்படி இணைந்து காட்சியளிக் கின்றனவோ, பாடல்களும் அப்படியே காட்சி யளிப்பது இயல்புதானே. இந்நூலின் பாடல் தொகை 51. இத்தெய்வப் பாடல்களை ஓதி அன்பர்கள் பயன் பெற்று உயர்வாராக!

இத் 'தெய்வப் பாட'லை வெளியிட்டுப் பயன் பெறும் என் தம்பி அ. தெ. மு. மு. நடராசனுக்கு வாழ்த்து. இதனை வெளியிட்டுச் சிறப்பிக்கும் தமிழ்க் காவலர் இராமனுத சேதுபதி அவர்கட்குவணக்கம்.

காரைக்குடி
1-5-1968.

ராய. சொ.

தெய்வப் பாடல்

நாகநாதபுரம் கோயில்கள்

நாகலிங்க விநாயகர்

நாக நாத
புரம்கண்ட நாகப்ப
மாகம் ஆர்புகழ்
வள்ளல் அமைத்தநல்
நாக லிங்க
விநாயகர் நண்ணரும்
போகம் நல்கும்
பொன்னடி போற்றுவாம்.

— ராய. சொ.

நாகநாதர்

நாக வாழ்வுறு
நாகப்ப ஞர்தரு
நாக நாத
புரம்பொலிவு எய்தவாழ்
நாகம், திங்கள்,
நதி,முடி சூடிய
நாக நாதர்தாள்
நம்தலை மேலவே.

— ராய. சொ.

பெரியநாயகி

அருமையார் தமிழ்புரக்கும் அப்பாண்டி
நாடுசிவ லோகம் ஆக்கும்
தருமமார் தனவணிகர் தழை,காரைக்
குடிநகரில் நாக நாத
புரம்ஆர்ந்த பெருமாளின் மருங்குஅருளும்
சிவபெருமான் பாகம் பூண்ட
பெரியநா யகிஅன்னை பெருமைமிகும்
இணையடிகள் பேணி வாழ்வாம்.

— ராய. சொ.

ஐந்து திருப்பாசுரம்

தேவாரம் I

நமச்சி வாயவே
ஞானமும் கல்வியும்.
நமச்சி வாயவே
நான்அறி விச்சையும்.
நமச்சி வாயவே
நா நவின்று ஏத்துமே.
நமச்சி வாயவே
நன்னெறி காட்டுமே.

— அப்பர்

ஐந்து திருப்பாசுரம்

திருவாசகம் 2

நானேயோ தவம்செய்தேன் ;
சிவாயநம எனப்பெற்றேன்.
தேனாய்இன் அமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுஉள்ளம்
புகுந்துஅடியேற்கு அருள்செய்தான்;
ஊனாரும் உயிர்வாழ்க்கை
ஒறுத்துஅன்றே வெறுத்திடவே.

— மணிவாசகர்

ஐந்து திருப்பாசுரம்

திருவிசைப்பா 3

" பாவார்ந்த தமிழ்மாலை
பத்தர்அடித் தொண்டன்எடுத்து
ஓவாதே அழைக்கின்றான் "
என்றுஅருளி, நன்றுமிகத்
தேவே!தென் திருத்தில்லைக்
கூத்தாடீ! நாய்அடியேன்
சாவாயும் நினைக்கண்டால்
இனிஉனக்குத் தடுப்பரிதே.

— வேணாட்டடிகள்

ஐந்து திருப்பாசுரம்

திருப்பல்லாண்டு 4

சொல்ஆண்ட சுருதிப் பொருள்சோதித்த
தூய்மனத் தொண்டர்உள்ளீர்!
சில்ஆண் டிற்சிதை யும்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்ஆண் டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதம்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்

ஐந்து திருப்பாசுரம்

பெரியபுராணம் 5

கற்பனை கடந்த சோதி
    கருணையே உருவ மாகி
அற்புதக் கோலம் நீடி
    அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும்
    திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்ற
    பூங்கழல் போற்றி போற்றி.

— சேக்கிழார்

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோல்முறை அரசு செய்க!
குறைவுஇலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நல்தவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்!

— கச்சி அப்பர்

கன்னிப் பிள்ளையார்

வானுலகும் மண்ணுலகும்
வாழ!மறை வாழ!
பான்மைதரு செய்யதமிழ்
பார்மிசை விளங்க!
ஞானமத ஐந்துகர
மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி
அஞ்சலிசெய் கிற்பாம்.

— உமாபதிசிவம்

மைந்தனுடன் அம்மை அப்பன்

''கொன்றை வேணி யார்தாமும்
பாகம் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேல் மைந்தரும்,தம்
விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்''
'என்றும் இன்பத் தேன்நுகரும்
இனிய கருணை பொழிக'என,
தென்றல் கமழும் தமிழ்பாடிச்
சென்னி வைத்துப் போற்றிடுவோம்.

— ராய. சொ.

காசி விசுவநாதர்

பூதலத்தில் உயர்ந்ததலம்
என்னப் போற்றிக்
காதலிக்கும் காசிநகர்
ஆளும் விசுவ
நாதனடித் தாமரையை
நயந்தே உச்சி
மீதணிந்து பெரும்பதவி
மேவி வாழ்வாம்.

— ராய. சொ.

விசாலாட்சி

மாலோனின் மகிழ்தங்கை ;
கணேசன், கந்தன்
மேலான நல்அன்னை;
விடையோன் பங்காள் ;
நூலாரும் நுண்இடையாள் ;
காசி வாழும்
சேலாரும் விசாலாட்சி
திருத்தாள் போற்றி.

— ராய. சொ.

ஆல்அமர் கடவுள்

பிள்ளைமதிக் செஞ்சடையான் ;
பேசாப் பெருமையினான் ;
கள்ளவிழும் பூங்கொன்றைக்
கண்ணியான் ; — உள்ளபடி
கல்லாலின் கீழிருந்து
கற்பித்தான் ஓர்வசனம் ;
எல்லாரும் ஈடேற வே.

— தாயுமானார்

கூத்தப்பெருமான்

சாட எடுத்தது, தக்கன் தன்
வேள்வியிற் சந்திரனை ;
வீட எடுத்தது, காலனை ;
நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது; தில்லையுள்
சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதம்அன்-
றோ,நம்மை ஆட்கொண்டதே.

— அப்பர்

சிவகாம சுந்தரி

பரந்துஎழுந்த சமண்முதலாம்
பரசமய இருள்நீங்க,
சிரம்தழுவு சைவநெறித்
திருநீற்றின் ஒளிவிளங்க,
அரந்தைகெடப் புகலியர்கோன்
அமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்துஅளித்த சிவகாம
சுந்தரிபூங் கழல்போற்றி.

— உமாபதிசிவம்

மணிவாசகர்

தேடுகின்ற ஆனந்தச்
சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ்
ஆடுகின்ற ஆரமுதே!
நாடுகின்ற வாதவூர்
நாயகனே! நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம்
வந்துஒருக்கால் மாற்றுதியே.

— இராமலிங்கர்

அம்பிகை

வேதன்,நெடு மால்,ஆதி விண்ணுடர்,
மண்ணுடர், விரத யோகர்,
மாதவர்,யா வரும்காண, மணிமுறுவல்
சிறிதுஅரும்பி, மாடக் கூடல்
நாதன்,இரு திருக்கரம்தொட்டு அம்மியின்
வைத்தகயல் நாட்டச் செல்வி [மேல்
பாதமலர், எழுபிறவிக் கடல்நீந்தும்
புணைஎன்பர்; பற்றி லாதோர்.

— பரஞ்சோதி

மாடப்பிள்ளையார்

ஓத வினை அகலும்;
ஓங்கு புகழ்பெருகும்;
காதல் பொருள்அனைத்தும்
கைகூடும்;-சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல்
பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

— பெருந்தேவனார்

மாடத் தண்டபாணி

முருகனே! செந்தி
முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன்
மகனே! – ஒருகைமுகன்
தம்பியே! நின் உடைய
தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

— நக்கீரர்

வைரவர்

விரித்தபல் கதிர்கொள் சூலம்
வெடிபடு தமரு கம்கை,
தரித்ததோர் கோல கால
பைரவன் ஆகி, வேழம்
உரித்து,உமை அஞ்சக் கண்டு
ஒண் திரு மணிவாய் விள்ள,
சிரித்துஅருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே.

— அப்பர்

நால்வர்

உழவாரப் பணிகொண்ட
உரையரசர் தாள்போற்றி!

பொழிஉமைபால் உண்டு,தமிழ்
பொழிந்தபிரான் கழல்போற்றி!

வழியடிமை நாவல்மன்
வன்தொண்டர் அடிபோற்றி!

தொழஆடும் திருவடிசேர்
தூமொழியார் பதம்போற்றி!

— ராய. சொ.

முருகக் கடவுள்

எந்தா யும்எனக்கு
அருள்தந் தையும்நீ,
சிந்தா குலம்ஆ
னவைதீர்த்து அருள்வாய்!
கந்தா! கதிர்வே
லவனே! உமையாள்
மைந்தா! குமரா!
மறைநா யகனே!

— அருணகிரிநாதர்

திருமகள்

கமலம் மேவு திருவே!—நின்மேல்
காத லாகி நின்றேன் ;
குமரி! நின்னை இங்கே—பெற்றோர்
கோடி இன்பம் உற்றார் ;
அமரர் போல வாழ்வேன்—என்மேல்
அன்பு கொள்வை யாயின் ;
இமைய வெற்பின் மோத—நின்மேல்
இசைகள் பாடி வாழ்வேன்.

— பாரதியார்

ஒன்பதுகோள்

தேன் அமர் பொழில்கொள் ஆலை
  விளைசெந்நெல் துன்னி
    வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய
  பிரமா புரத்து
    மறைஞான ஞான முனிவன்,
தான் உறு கோளும்நாளும்
  அடியாரை வந்து
    நலியாத வண்ணம் உரைசெய்,
ஆனசொல் மாலைஓதும்
  அடியார்கள் வானில்
    அரசாள்வர் ; ஆணை நமதே.

— சம்பந்தர்

வாழ்த்து

சீதமழை முகில்பொழிக! தேசமெலாம்
பயிர்விளைக! செல்வம் ஓங்க!
மாதர்குழாம் மக்கள்குழாம் மனை அறங்கள்
உடன்பொலிந்து மலிந்து வாழ்க!
மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி
தழைத்துஓங்க! மேலும் மேலும்
பூதலமேல் சிவபெருமான் ஆலயங்கள்
பூசனைகள் பொலிக மாதோ!

— திரிகூடராசப்பக் கவிராயர்

கிருட்டினமூர்த்திப் பெருமாள்

பாண்டவர்கள் வாழ்வுபெறப் பார்த்தனூர்
உய்திஉறப் பாரில் வந்து,
நீண்டகடல் பாம்பணையின் நினைவுநிறை
துயில்விடுத்த நேயக் கண்ணன்,
காண்தகுசீர்க் காரைநகர் ராயநா-
கப்பவேள் கண்ட இந்த
ஈண்டுபுகழ்க் கோயிலிலே கூத்தாடும்
இணையடிகள் ஏத்தி வாழ்வாம்.

— ராய. சொ.

கிருட்டினமூர்த்திப் பெருமாள்

கண்ணன் கழல்இணை
நண்ணும் மனம்உடையீர்!
எண்ணும் திருநாமம்;
திண்ணம் நாரணமே,

— நம்மாழ்வார்

செண்பகவல்லித் தாயார்

காரைக் குடியில் நாகப்பர்
கண்ட நாக நாதபுரச்
சீர்பெற்று ஓங்கும் திருமாலின்
தேவி செண்பக வல்லிஎனும்
பேர்பெற்று உயரும் தாயார்தாள்
பேணிப் பேறு பெற்றிடவே
ஆர்வத் துடனே பணிகின்றோம்,
அன்னை கடைக்கண் அருள்பொழிக.

— ராய. சொ.

திவ்வியப்பிரபந்தம் ।

உயர்வுஅற உயர் நலம்
உடையவன் யவன்,அவன்
மயர்வுஅற மதிநலம்
அருளினன் ; யவன்,அவன்
அயர்வுஅறும் அமரர்கள்
அதிபதி ; யவன்,அவன்
துயர்அறு சுடர்அடி
தொழுதுஎழு,என் மனனே.

— நம்மாழ்வார்

திவ்வியப் பிரபந்தம் 2

அடியோ மோடும் நின்னோடும்
    பிரிவுஇன்றி ஆயிரம் பல்லாண்டு!
வடிவாய் நின்வல மார்பினில்
    வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு!
வடிவார் சோதி வலத்துறை
    யும்சுடர் ஆழியும் பல்லாண்டு!
படைபோர் புக்கு முழங்கும்அப்
    பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே!

— பெரியாழ்வார்

திவ்வியப் பிரபந்தம் 3

நாளை வதுவை
    மணம்என்று நாள்இட்டுப்
பாளை கமுகு
    பரிசுடைப் பந்தற்கீழ்,
கோள்அரி மாதவன்
    கோவிந்தன் என்பான்ஓர்
காளை புகுதக்
    கனாக்கண்டேன் தோழீநான்.

— ஆண்டாள்.

திவ்வியப்பிரபந்தம் 4

வையம் தகளியா
வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன்
விளக்காக, — செய்ய
சுடர்ஆழி யான்அடிக்கே
சூட்டினேன் சொல்மாலை ;
இடர்ஆழி நீங்குகவே என்று.

— பொய்கையாழ்வார்

திவ்வியப்பிரபந்தம் 5

திருக்கண்டேன் ; பொன்மேனி
கண்டேன் ; திகழும்
அருக்கன் அணிநிறமும்
கண்டேன் ; — செருக்கிளரும்
பொன்ஆழி கண்டேன் ;
புரிசங்கம் கைக்கண்டேன் ;
என்ஆழி வண்ணன்பால் இன்று.

— பேயாழ்வார்

திவ்வியப்பிரபந்தம் 6

அன்பே தகளியா,
　　ஆர்வமே நெய்யாக,
இன்புருகு சிந்தை
　　இடுதிரியா, — நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு
　　ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

— பூதத்தாழ்வார்

திவ்வியப்பிரபந்தம் 7

நீள் நாகம் சுற்றி
    நெடுவரை நட்டு ஆழ்கடலைப்
பேணான் கடைந்து அமுதம்
    கொண்டுகந்த பெம்மானைப்
பூணார மார்வனை,
    புள்ஊரும் பொன்மலையைக்
காணாதார் கண்என்றும்
    கண் அல்ல கண்டாமே.

— திருமங்கையாழ்வார்

திவ்வியப்பிரபந்தம் 8

செடியாய வல்வினைகள்
தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா!
நின்கோவி லின்வாசல்
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்துஇயங்கும்
படியாய்க் கிடந்துஉன்
பவளவாய் காண்பேனே.

— குலசேகராழ்வார்

திவ்வியப்பிரபந்தம் 9

ஆல நிழற்கீழ்
அறநெறியை நால்வர்க்கு
மேலை யுகத்துரைத்தான்
மெய்த்தவத்தோன் ;—ஞாலம்
அளந்தானை ஆழிக்
கிடந்தானை ஆல்மேல்
வளர்ந்தானைத் தான்வணங்கும் ஆறு.

— திருமழிசையாழ்வார்

திவ்வியப்பிரபந்தம் 10

ஊர்இலேன் ; காணி இல்லை ;
உறவுமற்று ஒருவர் இல்லை ;
பாரில்நின் ; பாத மூலம்
பற்றிலேன் ! பரம மூர்த்தி !
கார்ஒளி வண்ண னே !ஓ !!
கண்ணனே ! கதறு கின்றேன் ;
ஆர்உளர் களைகண் அம்மா !
அரங்கமா நகரு ளானே !

— தொண்டரடிப்பொடியாழ்வார்

திவ்வியப்பிரபந்தம் II

கொண்டல் வண்ணனைக்
கோவல னுய்வெண்ணெய்
உண்ட வாயன்என்
உள்ளம் கவர்ந்தானை,
அண்டர் கோன்அணி
அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற்று
ஒன்றினைக் காணுவே.

— திருப்பாணுழ்வார்

திவ்வியப்பிரப்ந்தம் 12

நாவி ஞல்நவிற்
　　றிஇன்பம் எய்தினேன் ;
மேவி னேன்அவன்
　　பொன்அடி மெய்ம்மையே ;
தேவு மற்றுஅறி
　　யேன் ;குரு கூர்நம்பி
பாவின் இன்இசை
　　பாடித் திரிவனே.

— மதுரகவி ஆழ்வார்

சேனைத் தலைவர்

சீதரன், பூமகள், சேனையர் -
கோன்,தென் குருகைப்பிரான்,
நாத முனி,உய்யக் கொண்டார்,
இராமர்,நல் ஆளவந்தார்,
ஏதம்இல் வண்மைப் பராங்குச -
தாசர், எதித்தலைவர்,
பாதம் அடைந்துஉய்ந்த ஆழ்வான்,எம்-
- பார்,பட்டர் பற்றுஎமக்கே.

— அழகியமணவாளதாசர்

ஆழ்வார் - ஆச்சாரியார்

ஆயிரம் திருவாய்
மொழித்தமிழ் அருள் நம்
ஆழ்வார் அழகுத்
திருத்தாள் போற்றி!

ஆயிரம் திருமொழித்
தமிழ்த்திரு மங்கை
ஆழ்வார் வண்ணச்
சீரடி போற்றி!

ஆயிரம் மறைவிரி
ஆதிமந் திரம்புவிக்கு
அருள்இரா மானுசர்
அருங்கழல் போற்றி!

ஆயிரம் நாலு
ஆழ்வார் தமிழ்க்கடல்
ஆழ்ந்தவே தாந்ததே
சிகர்பதம் போற்றி!

— ராய. சொ.

வைகுண்ட வாசல்

பொருப்புஅடைந்து தங்கள்
புலன்ஐந்தும் செற்று
நெருப்புஅடைந்து நீர்அடைய
வேண்டாம் ; — விருப்புஅடைந்து
வைகுந்தம் சிந்தையிலே
வைப்பார்க்கு மாதவனும்
வைகும்,தம் சிந்தையுளே வந்து.

— பெருந்தேவனார்

கூத்தாடும் கண்ணன்

தம்தம் உறியில், அவர்வைத்த
தயிர்,பால் வெண்ணெய் எட்டாமல்
குந்தி உரலின் மிசைஏறி,
இளங்கோ வியர்முன் கூத்தாடி,
நந்தன் மனையில் அசோதைஇரு
நயனம் களிக்க விளையாடும்
மைந்தன் இருதாள் ஒருநாளும்
மறவா தாரே பிறவாதார்.

— வில்லிபுத்தூராழ்வார்

ஆழ்வார் வணக்கம்

பொய்கைமுனி, பூதத்தார்,
பேயாழ் வார்,தண்
பொருநல்வரும் குருகேசன்,
விட்டு சித்தன்,
துய்யகுல சேகரன்,நம்
பாண நாதன்,
தொண்டரடிப் பொடி,மழிசை
வந்த சோதி,
வையமெலாம் மறைவிளங்க
வாள்,வேல் ஏந்தும்
மங்கையர்கோன், என்றிவர்கள்
மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள் நாம்
தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின் றோமே.

— வேதாந்த தேசிகர்

நாராயண நாமம்

மடம்தாழும் நெஞ்சத்துக்
 கஞ்சனுர் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால்
 நால்திசையும் போற்றப்
படர்ந்துஆ, ரணம்முழங்க,
 பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை, ஏத்தாத
 நாஎன்ன நாவே?
‘நாராய ணு!’என்ஞ
 நாஎன்ன நாவே?

— இளங்கோ அடிகள்

அழகர் ஊசல்

மணங்கமழ் பூவையும்
மயிலும், தமாலக்காடும்
வண்கிளியும், நீலவெற்பும்
மடமான் கன்றும்,
இணங்குகட லும்,துகிரும்,
காரும் மின்னும்
யமுனையெனும் திருநதியும்
எகினப் பேடும்,
கணங்குழைய கோசலை,தே
வகி,ய சோதை
கண்மணியும் பாவையும்போல்
கமல வீட்டின்
அணங்குஅரசி யுடன்குலவி
ஆடீர் ஊசல்!
அலங்கார மாயவரே!
ஆடீர் ஊசல்!

— அழகர் கலம்பகம்

திருவரங்கர் ஊசல்

திருவாழ ; திருஆழி,
சங்கம் வாழ ;
திருஅனந்தன், கருடன்,
சேனையர்கோன், வாழ ;
அருள்மாறன் முதலாம்
ஆழ்வார்கள் வாழ ;
அளவுஇல்குணத்து எதிராசன்
அடியார் வாழ ;
இருநாலு திருஎழுத்தின்
ஏற்றம் வாழ ;
ஏழ்உலகும், நான்மறையும்,
இனிது வாழ ;
பெருவாழ்வு தந்தருள்நம்
பெருமாள், எங்கள்
பெரியபெரு மாள்,அரங்கர்
ஆடிர் ஊசல்.

— பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

வாழி

வாழியரோ ! தென் குருகை ;
வாழியரோ ! தென்புதுவை ;
வாழியரோ ! தென் குறையல்
மா நகரம் ; — வாழியரோ !
தக்கோர் பரவும்
தடம்சூழ் பெரும்பூதூர்
முக்கோல் பிடித்த முனி.

— பரகாலதாசர்

என்றும் இனிது வாழ்க !

பராவுபுகழ் நாகலிங்கப்
பிள்ளையார் கோயில்,இரு
பாங்கர் ஓங்கும்
அராவணைவிட்டு இங்குவந்த
கிருட்டினமூர்த் திப்பெருமாள்
அழகார் கோயில்,
குராமலரோடு அரவணிந்த
நாகநா தப்பெருமான்
குளிரும் கோயில்
இராயநா கப்பவள்ளல்
எழுப்பியஇக் கோயில்என்றும்
இனிது வாழ்க!

ராய. சொ.

பாட்டு முதற்குறிப்பு

பாட்டு முதற்குறிப்பு

திருமகள் அச்சகம்
காரைக்குடி.